புதிய அவையம்
PUTHIYA AVAIYAM (PEER- REVIEWED JOURNAL)
ISSN : 2456-821X
(vol. 9 Issue: 01 June 2025)

=====================================================

# நவீன நாடகங்களில் நந்தன் கதையாடல்

=====================================================

முனைவர் ம. கருணாநிதி
தமிழ் - உதவிப்பேராசிரியர்
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)
திருப்பத்தூர் - 635601

## முன்னுரை

நந்தன் எனும் பழமரபு சார்ந்த தொன்மக்கதையாடல் பல்வேறு இலக்கிய வடிவங்களில் கையாளப்பட்டுள்ளது. அந்தந்தக் காலகட்ட சமூக- பொருளாதார - அரசியல் - பண்பாட்டுக் கண்ணோட்டங்களின் அடிப்படையில் நந்தன் எனும் தொன்மக் கதையாடல் பல்வேறு வாசிப்பிற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அவை புராணமாகவும், சிறுகதையாகவும், கவிதையாகவும், நாடகமாகவும் பல்வேறு நிலைகளில் நந்தனை மீட்டுருவாக்கமும் செய்யப்பட்டுள்ளது. அந்தவகையில் நவீன நாடகங்களில் நந்தனின் கதையாடல் மாற்று வாசிப்பினை முன்வைத்துள்ளன. இந்திரா பார்த்தசாரதியின் "நந்தன் கதை"(2000), ஒத்திகை நாடகக்குழுவின் "போகாதே நந்தா போகாதே!"(2003), வெ.மு.சாசகான்கனியின் "ரோசக்கார நந்தன்"(2004) எனும் நாடகங்கள் நந்தன் தொன்மத்தினை அடிப்படையாகக் கொண்ட நாடகங்களாகும்.

## நந்தன் கதை : மேனிலையாக்க மாதிரி

நந்தன் கதை, ரோசக்கார நந்தன், போகாதே நந்தா போகாதே ஆகிய நாடகங்கள் நந்தனை ஒரு மேனிலையாக மாதிரியாகவே சித்திரித்துள்ளன. நந்தன்கதை எனும் நாடகத்தில் நந்தன் மேனிலையாக்கம் பெறுவதற்கு அழகுணர்ச்சியே காரணமாக விளங்குகின்றதை நந்தனின் உரையாடலின் வழி அறியமுடிகின்றது. "மேனிலையாக்க இயக்கத்தலைவனாக நந்தன் மாறுவதற்குச் சமய உணர்வு முதன்மையாகக் கூறப்படவில்லை. மாறாக நந்தனின் அழகியலுணர்வே காரணமாகக் கூறப்படுகிறது."(1989: ப.52) நிறுவன சமய தெய்வமான சிவனை வழிபாடு செய்தல் என்பது புனிதமானதாகவும், உயர்ந்ததாகவும், அழகானதாகவும் நினைப்பதே மேனிலையாக்கத்திற்கான காரணங்களாகும். நந்தனது சமூகத் தெய்வங்களான வீரன், இருளன், சாமுண்டி, கருப்பன், பெத்தண்ணன் முதலிய நாட்டுப்புற தெய்வங்கள் கீழானதாகவும், தாழ்வானதாகவும் நந்தன் கருதுகின்றான். தனது

பண்பாட்டு அடையாளங்கள் யாவும் கீழானதாகவும், நிறுவன சமயம் சார்ந்த பண்பாட்டு அடையாளங்கள் உயர்ந்ததாகவும் கருதும் நந்தனின் மனநிலையை நந்தன் கதை நாடகம் பதிவு செய்துள்ளது.

"நந்தன் : இதுதாங்க எங்க பறச்சேரி. கள்ளே கைலாசம்னு நினைக்கிற பயல்வ. அழகு அழகுன்னு என் கண்ணுக்கு மட்டும் ஏன் தெரியணும்? பறையனா படைச்ச சாமி எனக்கு கண்ணையும் கொடுத்தது தப்பு. கண்ணுலியா தெரியுது அழகு? மனசைத் தொறந்தது தப்பு.பறையனை மனிதனா ஆக்குறது மனசு; மனதைத் தொறந்தது சாமி. நந்தன் மனச தொறந்தா போதுமா? மத்தவங்க மனச தொறக்கவேணாம்? அழகைப் பார்க்க ஒருத்தன்; அளுக்கைப் பார்க்க இன்னொருத்தனா பறையங்க போக்கெ மாத்தணும்." (2000: ப.234)

என நந்தனின் உரையாடல் அமைகின்றது. பறையர்களுடைய வாழ்வினை நந்தனின் உரையாடல் காட்டுகின்றது. தாழ்த்தப்பட்டவர்களின் வாழ்வியல் அழுக்கானதாக நந்தன் கருதுகிறான். தனது மனக்கண்ணைத் திறந்த சிவன் மற்ற தாழ்த்தப்பட்டவர்களின் மனக்கண்ணையும் திறக்க வேண்டும் எனவும் அழுக்கானவர்கள் அழகுணர்ச்சியோடு இருக்க வேண்டுமென்றும் நந்தன் கருதுகின்றான். சிவனை வழிபடுவதுதான் அழகானது என நந்தன் கருதியதை நந்தனின் உரையாடல் காட்டுகிறது.

"நந்தன் : காட்டு மிராண்டி சனங்க. சாமிக்கு கள்ளு ஊத்தி கும்பிடறாங்க. இவங்க எப்படியாவது மாத்தியாகணும். என்ன செய்யலாம்?" (2000: ப.236)

"நந்தனுடைய வாழ்க்கையில் நிகழும் மாற்றமும் மேல் நிலையாக்கமே. புலையர்களுக்குரிய நாட்டு நெறியை ஒதுக்கிப் பக்தி நெறியைப் பின்பற்றுவதும், பார்ப்பணர்களுடைய கடவுளை வழிபடுவதும் இறுதியில் அந்தணர் உருவிலேயே இறைவனை அடைவதும் மேல்நிலையாகக் கோட்பாட்டை விளக்குகிறது" (1984:ப.210) என முத்து சண்முகன் குறிப்பிடுகிறார்.

நந்தனின் மேனிலையாக்க உணர்வினால் ஆதிக்க சமூகத்திற்கு பாதிப்பு ஏற்படும் என கருதி நந்தனை அவனது சமூகத்திலிருந்து ஒதுக்கி தனிமைப்படுத்துகிறார்கள். நந்தனது வழியிலேயே அவனை பலியிட முடிவு செய்கின்ற சூழ்ச்சியை நந்தன் கதை நாடக உரையாடல் பதிவுசெய்துள்ளது..

"வேதியர் 1 : நந்தன் சேதி தெரியுமா?
வேதியர் 2 : பறச்சேரியை அக்கிரஹாரமா ஆக்கப்பாக்கறான்
வேதியர் 3 : சிவபூசைங்கிறான்
வேதியர் 4 : சித்தம்பலங்கிறான்
வேதியர் 1 : சேரியில்லா வழக்கம்
வேதியர் 2 : பறையனுக்கு ஏது பூசம்?
வேதியர் 3 : பாப்பானுக்கு வந்தது நாசம்
வேதியர் 4 : மாடு தின்னும் புலையன்
வேதியர் 1 : அவனுக்கு மார்கழித் திருநாளாம்
வேதியர் 2 : ஆடு தின்னும் புலையன்
வேதியர் 3 : அவனுக்கு ஆனித்தரிசனமாம்
வேதியர் 3 : முத்தவிட்டாப் போச்சு
வேதியர் 4 : பூணூலை மாட்டிப்பான் பறையன்" (2000: ப.237)

எனும் உரையாடல், நந்தன் கதை நாடகத்தில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது.

நிறுவன சமய வழிபாடே சிறந்ததாக நந்தன் கருதியதை நாடகம் காட்டுகின்றது. நந்தனது சமூகத்தின் வழிபாட்டு முறையை தாழ்வானதாகக் கருதி நிறுவனசமய வழிபாடே உயர்ந்த பண்பாடாக கருதும் மேனிலையாக்க மனோபாவத்திற்குள் நந்தனின் மனம் விரும்பினாலும் பார்ப்பனிய மேலாதிக்கம் கட்டுப்பாடுகளையும் தடைகளையும் விதிக்கின்றது. கோபாலகிருஷ்ண பாரதியாரின் நந்தனார் சரித்திர கீர்த்தனையில் இடம்பெறாத செய்திகள் நந்தன் கதை நாடகத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இதில் அபிராமி எனும் பாத்திரத்தைக் குறிப்பிடலாம். அபிராமி கோவிலுக்குத் தொண்டூழியம் செய்கின்ற தாசியாகக் காட்டப்பட்டுள்ளாள். இவள் பரதக்கலையில் சிறந்து விளங்குபவள். அவளோடு நந்தன் காதல் கொண்டதால் ஆதிக்க வர்க்கம் இருவரையும் தீயிட்டு அழித்துவிட வேண்டுமென சூழ்ச்சி செய்கின்றது. வேதியர் கனவில் நந்தன் தீயில் இறங்கி பின் என்னைத் தரிசிக்க வேண்டுமெனவும் நந்தனிடம் அசரீரியும் குரலாக ஒலிக்கின்றது. வேதியர் நந்தனிடம் உரைக்க நந்தனும் இதனை ஏற்று தில்லை கோயிலுக்குள் சென்று, தீயில் அபிராமியோடு இறங்குவதாய் நந்தன் கதை நாடகம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

"வேதியர் : பறையனாய்ப் பொறந்த பெரும்பாவம் தீயினில் குளித்தால் போய்விடும்.

நந்தன் : தீயிலே குளிக்கணுமா?

முதலியார் : பாவிகளைப் பொசுக்கும் அக்னி, பக்தனை ஏற்கும் புனலாய்.

உடையார் : பறையன் பாப்பானாகும் விந்தை

நந்தன் : பாப்பானா ஆனாத்தான் ஏற்குமா சாமி?

வேதியர் : பாப்பானாய்ப் பொறப்பது ஜென்மபலன். ஆண்டவன் ஆக்குவது தெய்வ நலன்.

நந்தன் : ஏங்கூட இருக்கிற மத்தவங்க?

முதலியார் : எல்லோரும் தீயிலே குளிக்கட்டும்.

உடையார் : பறையங்க எல்லாருக்கும் பூணூல் வரும்" (2000: ப.283)

நந்தன் எனும் தொன்மத்தை நந்தன் கதை நாடகம் அறிவிப்பூர்வமாகச் செயல்படக் கூடியவராக காட்டியுள்ளது. இறுதியில் ஆதிக்க சாதியின் சூழ்ச்சியை உணராதவராகவும் சித்திரிக்கப்பட்டுள்ளது. இந்நாடகத்தின் கடைசியில் நந்தன் அசரீரியின் குரலினை தெய்வ வாக்காகவும் ஏற்றுக்கொள்வதும், ஆதிக்கவர்க்கத்தினரின் செயலுக்கு அடிபணிவதாக நந்தனைக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. நிறுவன தெய்வத்தைத் தொழுவதற்குத் தன்னைப் புனிதப்படுத்த தீயில் இறங்கிய பின்னே தரிசிக்க அனுமதிக்கும் நிலையினை நந்தனின் தொன்மம் உணர்த்துகின்றது. எல்லோரும் தீயில் இறங்குவது மூலமாத் தான் மேனிலையாக்கம் பெற முடியும் என்கிற ஆதிக்க வர்க்க சூழ்ச்சியை நந்தன் உணர்கின்றதை நந்தன்கதை நாடகம் காட்டுகின்றது.

"அசரீரி : நந்தா வா! நீதான் உண்மையான அந்தணன்! ஆபிராமி வா! அக்கினியில் குளித்து, இருவரும் அந்தணர் பொலிவுடன் வாருங்கள்." (2000: ப.285)

அசரீரியின் குரல் கேட்க நந்தனும் அபிராமியும் அரங்கின் பின் பகுதியில் தீ சுவாலையில் இறங்குவதாக நந்தன் கதை நாடகத்தில் காட்சி வெளிப்பட்டுள்ளது.

**போகாதே நந்தா! போகாதே!**

ஒத்திகை நாடகக் குழுவின் இயக்கத்தில் உருவான 'போகாதே நந்தா போகாதே!' எனும் நாடகம், தாழ்த்தப்பட்ட மக்களின் பழக்க வழக்கங்களை இழிவானதாகக் கருதும் நிறுவனசமய மேலாதிக்க – சனாதனத்திற்கு எதிரான கருத்தியலை 'போகாதே நந்தா போகாதே!' நாடகம் பேசுகின்றது.

நந்தன் தில்லைக்கு நாளை செல்ல வேண்டுமென மனதில் பாடிக் கொண்டு அரங்கில் உள் நுழைகிறான். நாட்டுப்புற வழிபாட்டுச் சடங்காக சாமியாடுதலும் கிடாய் வெட்டுதலும் நாடகத்தில் காட்சிப்படிமமாக நிகழ்த்தப்படுகிறது. இதைப் பார்த்துக் கொண்டிருக்கின்ற நந்தன் இதனை தன் சமூகத்தில் நிகழக்கூடிய இழிவான செயல்பாடாய்க் கருதுகிறான். தாழ்த்தப்பட்டவர்களைத் திருத்துவதற்கு நந்தன் மேல்நிலை அடையவேண்டுமென ஆவேசம் கொள்கிறான்.

"நந்தன் : முனியாண்டி வீரன் காட்டேரி இதெல்லாம் என்னடா சாமி.
கள்ளக் குடிச்சுக்கிட்டு கரியத்திண்டு கிட்டு
நாக்கத்துருத்திக்கிட்டு இது என்னடா சாமி உங்கள திருத்த
முடியாதா? நீங்க கும்புடுறதெல்லாம் சாமியாடா? தில்லை
அம்பல தடம் ஒன்று இருக்குதா"(போகாதே நந்தா போகாதே)

தாழ்த்தப்பட்டவர்களின்விடுதலைக்கான மேனிலையாக்கத்திற்கான குறியீடாக நந்தன் தொன்மம் விளங்குவதை 'போகாதே நந்தா போகாதே!' நாடகம் காட்டுகின்றது.

தாழ்த்தப்பட்டவர்களின் பண்பாட்டு அடையாளங்களில் இருந்து மீளவேண்டுமென நந்தனின் உரையாடல் அமைந்துள்ளது. இந்நாடகத்தில் பசி X தெய்வம் எனும் சொல்லாடல் நேர்எதிர் இணைவில் பயன்பட்டுள்ளது. நந்தனுக்கு தெய்வமே உணவை விட மேலானதாகப் படுகின்றது. நந்தனது சமூக மக்களுக்குத் தெய்வத்தை பசியோடு தொடர்புபடுத்தும் தன்மையினை அறிய முடிகின்றது.

நாட்டுப்புறச் சமய தெய்வ வழிபாடு உற்பத்தி, மறு உற்பத்தி எனும் உற்பத்தி சார்ந்த இயங்கியலைக் கொண்டதாகும். தெய்வவழிபாடும் உணவோடு தொடர்புபடுத்தப்படும். மழைபொழிந்தால் தெய்வத்தை வணங்கி, உழவுத்தொழிலில் ஈடுபடுவதும் மழை வரவில்லை எனில் அத்தெய்வத்தைப் பலித்துக் கூறுவதும் தெய்வத்தின் மேல் மிளகாய்ப்பொடியினையும் சேற்றினை பூசுவதும் தெய்வ வழிபாட்டோடு தொடர்புடைய சடங்காகும். இச்சடங்கும் உணவு உற்பத்தியோடு தொடர்புடையதாகும். எனவே நாட்டுப்புற மக்கள் முதலில் வாழ்க்கைக்குத் தேவையான உணவுப் பொருட்களும் அதனோடு தொடர்புடைய சடங்குகள், கலை ஈடுபாடுகள் தெய்வவழிபாட்டு நிகழ்வுகள் என ஒன்றோடு ஒன்று கூட்டுச் செயல்பாடாய் வெளிப்படக்கூடியதாகும். அவ்வகையில் 'போகாதே நந்தா போகாதே' நாடகத்தில் நந்தனது சமூகமக்கள் ஆணும் பெண்ணுமாய் சாமியாடுவதும் கிடாய் வெட்டி பகிர்ந்து உண்பதும் வழக்கமாகக் கொண்டு வாழ்க்கை நடத்துபவர்கள். நந்தன் மேனிலையாக்கம் பெறுவதற்காக தன் சமூகத்திற்குரிய வழிபாட்டு முறை, உணவுப் பழக்கவழக்கங்கள் போன்றவற்றினை தவிர்ப்பது நாடகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இந்நாடகத்தில் தஞ்சைப்பகுதியில் 2000ஆம் ஆண்டில் ஏற்பட்ட உணவுப் பிரச்சினையால் தஞ்சைப்பகுதி மக்கள் நத்தை, எலிக்கறியை உணவாக உட்கொண்டு வாழ்ந்த நிகழ்வும் நாடகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

"ஒருவர் : வேட்டைக்குப் போனையே எதுவும் கெடைக்கலையா?
மற்றொருவர் : ரெண்டு எலி தாண்டா கெடச்சது

ஒருவர் : நா சாப்பிட்டு ரெண்டு நாளாச்சு. எனக்கு கொஞ்சுண்டு எலிக்கறி கொடுடா ரெம்ப பசிக்குதுடா

மற்றொருவர் : ஆளுக்குப்பாதி எடுத்துக்கிறுவோம்

நந்தன் : இறைவா! இவங்களுக்கு நல்ல புத்திய கொடுக்கக் கூடாதா?

பெரியவர் : மொதல்ல வயித்துக்கு சோத்தக் கொடுக்கச் சொல்லு உங்க இறைவன. நீயே சோத்துக்கு வழியில்லாம

சூத்துக்காஞ்சுபோயி கெடக்குற.

நந்தன் : நண்டு நந்தையும் தவிர உங்களுக்கு வேற எதுவும் தெரியாதா? எல்லாத்துக்கு மேல தில்லை அம்பலதடம் ஒன்று இருக்குது"(Nபோகாதே நந்தா போகாதே, அச்சிடப்படாத நாடகம்)

என உரையாடல் அமைகின்றது. இந்திரா பார்த்தசாரதி நாடகத்தில் உரையாடலாகப் பயன்படுத்தப்பட்ட வரிகள் 'போகாதே நந்தா போகாதே!' நாடகத்தில் பின்பாட்டாகப் பாடப்பட்டுள்ளதையும் அறியமுடிகின்றது.

"மாடு தின்னும் புலையா - உனக்கு
மார்கழி திருநாளோ
ஆடு தின்னும் புலையா - உனக்கு
ஆனித் தரிசனமோ"(மேலது)

எனும் நந்தன் கதை நாடக வரிகள் போகாதே நந்தா போகாதே நாடகத்தில் 'நாடு சிரிக்கும் வார்த்தைகளன்றி, "போடா… போடா…. போடா…." எனும் வரிகளோடு பாட்டாகப் பாடப்பட்டுள்ளது. நந்தன் தில்லையிலுள்ள சிவனைத் தரிசிப்பதற்காக தன் சமூக வழக்கங்களைத் தவிர்க்கும் தன்மையை நாடகம் காட்டுகின்றது.

"நந்தன் : சாமி நா மாட்டுக்கறி திங்கிறதில்ல மது மாமிசம் விரலால கூட தொடுதில்ல. எனக்குக் கதி மோட்சமே கிடையாதா?"(மேலது)

மாமிசம் உண்ணாமல் இருப்பதே உயர்ந்த பண்பாடாகக் கருதும் நந்தனின் மனோபாவத்தைக் காட்டுகின்றது. மேல்நிலையாக்கத்திற்குள் தன் சுயத்தை இழந்தவராக நந்தன் விளங்கியதை போகாதே நந்தா போகாதே நாடகம் காட்டுகின்றது. தன் பண்பாட்டு அடையாளங்களை விட்டுச் செல்லாதே என்பதாக நந்தனுடைய சமுதாய மக்கள் நந்தனுக்கு அறிவுறுத்துவதாய் இந்நாடகம் அமைந்துள்ளது. இந்நாடகம், இந்திரா பார்த்தசாரதிவின் நந்தன் கதையில் இருந்து சற்று வேறுபட்டு இருக்கிறது. நந்தன் கதையில் நந்தன் எனும் தொன்மம் தன் சமூகமக்களிடமிருந்து வேறுபட்டு அறிவுப்பூர்வமாக செயல்படக் கூடியவராகவும், தன் சமூக மக்களை அறிவில்லாதவராகவும் நினைக்கும் தன்மையில் நந்தன் தொன்மத்தைக் கையாளப்பட்டுள்ளது. ஆனால் போகாதே நந்தா போகாதே நாடகத்தில் நந்தனை சிவன் மேல் பைத்தியமாக இரவும் பகலும் அலைந்து திரிபவனாகவும் காட்டுகின்றது. தாழ்த்தப்பட்ட மக்களை அறிவுப்பூர்வமாக யோசிக்கக்கூடியவர்களாக நாடகம் காட்டுகின்றது.

"நந்தா நமக்குனு ஒரு ஜாதி இருக்கு
நமக்குனு ஒரு ஆட்டம் இருக்கு
நமக்குனு ஒரு அடி இருக்கு

பாப்பான் பாக்கு வெத்தல வச்சு அழைக்கவா போறான்
சுத்தமா இருந்தாதான் கோயிலுக்குள்ள விடுவாங்கலாம்லா
நாங்களும் தெனநாலுமுற குளிக்குறோம்
கோயிலுக்குள்ள விடச்சொல்லு பாப்போம்"(மேலது)

தாழ்த்தப்பட்டவர்களுக்கென தனித்துவமான பண்பாட்டு பழக்க வழக்கங்களைப் பேசுகின்றது. இந்நாடகத்தில் நந்தனின் மேனிலையாக்க உணர்வினிலிருந்து எதிர்க்கதையாடலாய் வெளிப்பட்டுள்ளது.

**ரோசக்கார நந்தன்**

வெ.மு.சாசகான்கனியின் 'ரோசக்கார நந்தன்' நாடகம் நந்தனின் தொன்மக்கதையாடலை மையமாகக் கொண்டு உருவான மாற்றுச் சிந்தனையைக் கொண்ட நாடகமாகும். 'நந்தன் கதை', 'போகாதே நந்தா போகாதே' எனும் இரு நாடகங்களிலிருந்து இந்நாடகம் வேறுபட்டு இருக்கிறது.

ஆதிக்கவர்க்க நலன்களில் தன்னைக் கரைத்துக் கொள்ளாமல் தன் சமூக மக்களின் விடுதலையைப் பற்றிப் பேசுபவனாக நந்தனை இந்நாடகம் மீட்டுருவாக்கம் செய்ய எதிர்க்கதையாடலை முன்வைத்துள்ளது. நந்தன் கதை, போகாதே நந்தா போகாதே நாடகங்கள் பக்தியின் பரவச நிலையில் ஐம்புலன்களும் இறைவனோடு கலந்து உருகும் நந்தனைப் படைத்துள்ளன. திருப்பன்கூரின் கோயிலுக்குள் நுழையும் உரிமையும் சமூக அங்கீகாரமும் நந்தனுக்கும் நந்தனது சமூகத்திற்கும் கிடைக்கவில்லை என்கிற ஆதங்கமே நந்தனை சிதம்பரம் கோயிலுக்குள் ஆலயப்பிரவேசம் செய்யத்தூண்டுதலாய் அமைந்தது என இந்நாடகம் காட்டுகின்றது.

இந்நாடகம், ஒடுக்கப்பட்ட மக்களுக்கான உரிமை சார்ந்த பிரச்சினையை முன்வைத்துள்ளது. சனாதன மரபிற்கு எதிராகப் பேசும் நந்தன் மாற்றுத் தொன்மமாக உருக்கொண்டுள்ளதை இந்நாடகத்தில் பார்க்கமுடிகிறது. நாட்டுப்புறச் சமய வழிபாட்டினை மேற்கொள்ளும் தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் நிறுவன சமய வழிபாட்டினைப் பின்பற்றுவது என்பது மேனிலையாக்கச் செயல்பாடாக இருந்தாலும் ஒருசாராருக்கு மட்டும் வழிபடும் உரிமையும், ஒரு சாராருக்கு உரிமை மறுக்கப்படுவதுமான உரிமை சார்ந்த பிரச்சினையாக நந்தனின் ஆலயப் பிரவேசம் அமைகின்றது. ரோசக்கார நந்தன் நாடகம் நந்தனின் மறைக்கப்பட்ட வரலாற்றை மீட்டெடுக்கும் வகையில் அமைந்துள்ளது.

"நந்தன் : நாம மாட்ட அறுத்து, சேகரம் செய்யிர கோரோசனை
கோயிலுக்குள்ள போகலாம். ஆனா, நாம போகக்கூடாது.
மாட்டுத்தோலை உரிச்சுக் காயவச்சு வார்பிடிச்சு நாம
செய்யிற பேரிகை, மத்தளம் கோயிலுக்குள்ள போகலாம்.
நாம போகக்கூடாது. மிருகத்திலிருந்து நாம எடுத்துக்
கொடுக்கிற நரம்புகள் கோயில் வீணைக்கும் யாழுக்கும்
கட்ட உள்ள போகலாம். நாம மட்டும் போகக்கூடாது.
என்னடா நியாயம்? (ரோசக்கார நந்தன்:2003)

சிவனின் கோயிலுக்குள் நுழைவதை உரிமை சார்ந்த பிரச்சினையாக இந்நாடகத்தில் மீட்டுருவாக்கம் செய்யப்பட்டுள்ளது. உழைப்பாளர்களின் உழைப்பால் விளையும் பொருட்கள் கோயிலுக்குள் போகலாம். நாங்கள் போகக்கூடாதா? எனும் கேள்வி உரிமைக்காகப் போராடும் விதமாய் அமைந்துள்ளது.

ஆதிக்கசாதியினரின் சூழ்ச்சியைப் புரிந்து கொண்டு ஒட்டு மொத்த நந்தனது சமூகத்தினரும் கோயிலுக்குள் செல்வதற்கு முடிவெடுக்கிறார்கள்.

ரோசக்கார நந்தன் நாடகம், நந்தன் தொன்மத்தை புரட்சியின் வடிவமாகச் சித்திரித்துள்ளது. அக்கினியில் இறங்கி இறைவனைத் தரிசித்ததாக நந்தனார் சரித்திரக் கீர்த்தனை பதிவுசெய்துள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு 'நந்தன்கதை', 'போகாதே நந்தா போகாதே' எனும் இரு நாடகங்களும் நந்தன் தீயில் இறங்கியதைக் காட்சிப்படுத்தியுள்ளன. ஆனால் 'ரோசக்கார நந்தன்' நாடகத்தில் நந்தனை தீயில் இறங்கச் செய்த சூழ்ச்சி  இடம்பெறவில்லை. மாறாக, நந்தன் ஆலயப்பிரவேசம் செய்வதற்காகப் போராட்டம் நடத்துவதாய் இந்நாடகம் பதிவு செய்துள்ளது.

"நந்தன் : தில்லைக்கு மௌனமா போக வேணாம். இங்கிருந்தே
கோசம் போட்டுட்டே போகலாம்.
பாரசன் : கோசமும் ரோசத்தைக் காட்டுற மாதிரி இருக்கணும். வள்ளுவா நீ
ஆரம்பிடா
வள்ளுவன் : நந்தி விலகுனா போதுமா? அட, நாங்க உனக்கு ஈனமா?
நந்தன் வர்றான் தில்லைக்கு! நாயம் கேட்போம்  நாளைக்கு!"(மேலது)

மாற்றுச் சிந்தனை சார்ந்து சமூகத்தில் நிழுகின்ற மையநீரோட்ட வைதீக மரபிற்கு எதிராக மக்களின் விடுதலை சார்ந்த போராட்ட மனநிலையும் மேலாதிக்கத்திற்கு எதிராக அதிகாரம் பெறுவதற்கான கருத்தியலை 'ரோசக்கார நந்தன்' நாடகம் பதிவுசெய்துள்ளது.

**முடிவுரை**

நவீன நாடகங்களில் நந்தன் கதையாடல் வைதீக மேலாதிக்கத்திற்கு எதிரான குரலாகவும், சாதி ஆதிக்கத்திற்கு எதிரான போராட்டமாகவும், தொழிலாளர் எழுச்சி, வர்க்க விடுதலைக்கானதாகவும் பார்க்கப்பட்டுள்ளன. நந்தன் எனும் தொன்மப் பாத்திரத்தின் வழியாக அகமண எதிர்ப்பு, சமத்துவத்தை நிலை நாட்டுதல், மேனிலையாக்க மனநிலையைப் புரிதல், ஒடுக்கப்பட்ட சமூக மேன்மையைக் கட்டி எழுப்புதல் எனும் பொருண்மையில் நந்தனை மீட்டெடுத்தலும் அடையாளப்படுத்துதலும் நிகழ்ந்துள்ளது.

**துணைநூல்கள்**


1. இந்திரா பார்த்தசாரதி, 2000, இந்திரா பார்த்தசாரதி நாடகங்கள், இராஜராஜன் பதிப்பகம், சென்னை.
2. உத்திராபதி.மா, 1989, காலந்தோறும் நந்தன், நேத்ரா வெளியீடு, சென்னை.
3. ஏர் காலாண்டு இதழ், 2004, விடியல் அச்சுக்கூடம், மதுரை.
4. தஞ்சை ஒத்திகை நாடகக்குழு, 2003, போகாதே நந்தா போகாதே!. ( நிகழ்த்துப் பனுவல்)
5. முத்துச்சண்முகன், 1984, தமிழ் இலக்கியக்கோட்பாடுகள், நாராயணம்மாள் பதிப்பகம், மதுரை.